# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,728 — 1966 දෙසැම්බර් 30 වැනි සිකුරාදා — 1966.12.30

14,728 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 387 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 389 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 392 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 392 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. . | 398 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கண்டி மா நகரசபையின் எல்லைகள் நீடித்தலும், எல்லைப்படுத்தலும்

கண்டி மாநகரசபையின் எல்லைகள் நீடித்தலும், எல்லைப் படுத்தலும் சம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு கௌரவ உள்ளூராட்சி மந்திரி அவர்கள் தீர்மானம் செய்து, அத்தீர் மானத்திற்கு இணங்க, ஓய்வுபெற்ற கனம் என். கிறிஸ்ன தாசன் (தலைவர்), கனம் டி. ஏ. துனுவில, கனம் ஜே. டபிள்யு. சுபசிங்க, கனம் எர்ல் டீ அல்விஸ் (சமாதான நீதிவான்), அவர்களை அதிகாரியாக கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களை அறிவிக்குமாறு நியமனஞ் செய்யப்பட்டிருக் கிறார்கள் :

(அ) தற்பொழுது கண்டி மாநகரசபை எல்லைக்கு வெளி யில் உள்ள பிரதேசம், தேவைப்படின் அத்துடன் சேர்க்கப்பட வேண்டியவை :

(ஆ) பிரதேசம், குடிசனம், வேறு வழிகள் சம்பந்தமாக கண்டி மாநகரசபையில் இருக்கவேண்டிய உறுப் பினர்களின் எண்ணிக்கை ;

(இ) மாநகரசபை எல்லைகளின் வரையறை ;

(ஈ) இயன்றளவு, திடப்படுத்தக் கூடிய அளவிற்கு மா நகரசபையின் ஒவ்வொரு வட்டாரங்களினதும் எல்லைகளின் வரையறை, திருப்பி எல்லைப்படுத்தப் பட்டதும் ஒவ்வொரு வட்டாரங்களினதும் சம தொகையான வாக்குகள்.

சபையின் தொடர்பான நோக்கங்களுக்கு உள்பட, எல் லாவற்றிலும் அல்லது ஏதாவதொரு விடயங்களில் முறை யீடு செய்ய விரும்பும் ஸ்தாபனங்களும், பொது சனங்க ளும் அவ்விதமே எழுத்துமூலம் செய்யலாமெனவும், அப் படிப்பட்ட எல்லா முறையீடுகளையும் 1967 ஆம் ஆண்டு சன வரி மாதம் 20 ஆம் திகதி கீழே கையொப்பம் இடப்பட்ட வருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பும்படி வேண்டப்படு கின்றனர்.

எழுத்து மூலம் அனுப்பப்படும் முறையீடுகள், நான்கு (4) பிரதிகளைக் கொண்டதாகவும், ரைப்படிக்கப்பட்டதாக வும் இருத்தல் விரும்பத்தக்கது.

சபைக்கு தேவைப்படுமாயின் சபை கூடுதல்கள் (பின்னர் ஒருவிடத்தில் அல்லது குறிக்கப்பட்ட திகதியில்) முறை யீடு விசாரணைகள் நடத்துவதற்கு முன் அவர்கள், அவர் களின் பிரதிநிதிகள், மன்றும், சபைக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

எல். எம். சமரசிங்க,
விசாரணை செய்யும் சபையின் செயலாளர்.

உள்ளூராட்சி அமைச்சு,
கண்டி செக்கிறட்டாறியட், கண்டி,
1966 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி.

12-1392—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆடு ஜுலை மீ 15 ந் உ.

எல் டி. பி. 27/39
எல்ஜிடி /ஜிசி. 16/2/5

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ம் பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர் முருகேசன் திருச்செல்வம், ஆகிய நான், இவ்வறிவித்தல் வாயிலாக—

(1) இதன் கண்ணுள்ள அட்டவணையின் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள, புத்தள மாவட்டத்து குமார வன்னிப் பலாத்தையிலுள்ள ஆனைமடுக் கிராமப் பிரதேசத்திலிருக்கும் 659 ம் இலக்கக் கிராம சேவகர் பிரிவை உள்ளடக்கிய தற்போதிருக்கும் வட்டாரத்தை, அவ்வட்டவணையின் 11 ம் பத்தியிலுள்ள நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள எல்லைகளையுடைய புதிய வட்டாரங்களாக உட்பிரிவு செய்கிறேன், மேலும்,

(2) (1) ம் பந்தியின் ஏற்பாடுகள்—

(அ) 1968 ல் நடைபெறவிருக்கும் முற்கூறப்பட்ட ஆனைமடுக்கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் அங்கத்தவர் பொதுத் தேர்தலோடு தொடர்புடைய எவ்விஷயத்தோடும் அவை சம்பந்தப்பட்ட வரையில் இவ்வறிவித்தல் கசெற்றிற் பிரசுரிக்கப்படும் திகதியன்று நடைமுறைக்கு வருமெனவும்; மேலும்,

(ஆ) அவ்வேற்பாடுகள் வேறு எவ்விஷயத்தோடும் சம்பந்தப்பட்ட வரையில் 1968, ஜூலை முதலாந் திகதி நடைமுறைக்கு வருமெனவும், வெளிப்படுத்துகிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1966 ஆண்டு திசெம்பர் மீ 20 ந் வ.

அட்டவணை

| பத்தி I<br>தற்போதிருக்கும் வட்டாரம் | பத்தி II<br>புதிய வட்டாரம் |
|---|---|
| கிராம சேவகர் பிரிவு இல. 659 வடிகமங் காவை | 11 ம் இல. வட்டாரம்—வடிகமங் காவை. வடிகமங்காவை, பெரு மருட்டுவை, வட கெலக்கமை, உப்பலாவத்தை, பெம்மை பெம் மக்கமை, கொன்வேவை. கொட்டுவேவை, கும்புக்கக வேவ, வேரக்கொடயக்கமை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. |
| | 11 ம் இல. வட்டாரம்—தரும் பாலை. தரும்பாலை, மாரியகமை, அட்டிக்குளம், நாபத்தவை, அம்பிட்டி, அம்பிட்டிக்கமம், கருங்கொடியாவை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது. |

12-1351—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

## நகர சபைகள் கட்டளைச் சட்டம்

### 75(1) ம் பிரிவின் கீழான அறிவித்தல்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 75 (1) ம் பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசு திருச்செல்வம் ஆகிய நான், அக்கட்டளைச் சட்டத்தின் 74 ம் பிரிவில் காட்டப்பட்ட கட்டட எல்லையினுல் பாதிக்கப்பட்ட பாணந்துறை பௌத்த மஹா சங்கத்தின் தனுதிகாரியினுல் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், பாணந்துறை நகர சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள உபாத்தியாய மாவத்தை என்றழைக்கப்படும் வீதி சம்பந்தமான கட்டட எல்லையை, அவ்வீதியினது மத்தியிலிருந்து இருபது அடியாக அத்தகைய எல்லையைக் குறைப்பதன் மூலம் இவ்வறிவித்தல் வாயிலாக மாற்றஞ் செய்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, திசெம்பர் 5, 1966.

12-1467—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவினுல் எனக்களிக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், களுத்துறை மாவட்டத்திலுள்ள முன்வத்தைப்பாகைப் பற்றுக் கிழக்கு கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை அப்பிரிவின் கீழ் அப்பிரதேசத்தில் ஒரு நிலவரியை விதித்து அறவிடுதற்கு இவ்வறிவித்தல் வாயிலாக அதற்கு அதிகாரமளிக்கிறேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 17.12.1966.

12-1333—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

எண். ஈ. பீ./பீ/6/5.

கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களால், அத்தியாயம் 2 ஆகிய தொழுக்கரிப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் உப பிரிவின்கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, கீழ்க்காணும், அதாவது :—

உள்ளூராட்சி அமைச்சு, உள்ளூராட்சிப்பிரிவு, உதவிச் செயலாளர் திருவாளர் எஸ். எஸ். சில்வா அவர்களை, அவரது கடமைகளுடன், எழுத்திலுள்ள யாதாம் சட்டத்தின் நோக்கத்திற்காகவேனும் 15.12.1966 இல் இருந்து ஒரு உள்ளூராட்சிப் பிரதி ஆணையாளர் ஆகவும், நியமனம் செய்கிறேன் என, இத்தால் யாபேருக்கும் அறிவிக்கப்படுகிறது.

இ. ஜி. குணவர்த்தன,
உள்ளூராட்சி அமைச்சின்
நிரந்தரச் செயலாளர்.

1966 ஆம் ஆண்டு டிசெம்பர் 15.

12-1431—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

# பதவிகள் — வெற்றிடம்

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

1. படிகள்.—வேறுவிதம் சொல்லப்பட்டாலன்றி வீட்டுவாடகைப்படி, தற்காலிக வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிக விசேட வாழ்க்கைப்படி ஆகியவை அரசாங்க விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கக் கொடுக்கப்படற்பாலன.

2. சேவை நிபந்தனைகள்.—உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் (அதிகாரம் 264) ஏற்பாடுகளுக்கும், அவற்றினது திருத்தங்கள் எதனிற்கும், அவற்றின்கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகாரசபையினால் விதந்துரைக்கப்படும் மற்றைய சேவை நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாய் நியமனங்கள் அமையும்.

3. வேலைக்கமர்த்தப்படுவதற்கான நியதிகள்.—1952 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 8 ஆம் திகதி வெளியான 10,432 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் 4 ஆம் பகுதி II.ல் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்ட பதவிகளும் அவற்றோடு காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றிச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின்கீழ் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரியனவாகும்.

(அ) அரசாங்கத்தின்கீழ் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள், இளைப்பாற்றிச் சம்பளம் பற்றிய விதிகளின் 21ம் ஆம் பிரிவின்கீழ் விடுதலை செய்யப்பட்டு உள்ளூராட்சிச் சேவையின் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு மாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றிச் சம்பள உரிமைகள் பாதுகாத்துக் கொடுக்கப்படும்.

(ஆ) உள்ளூராட்சித் தாபனங்களில், அவற்றின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போதும் கொடுக்கப்படும் இளைப்பாற்றிச் சம்பளம், 1949 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைத் (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்டவாறுள்ள 1945 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவுக்கிணங்க உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர் முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றிச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(இ) இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் 1952 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வெளியான 10,329 ஆம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குத் தங்கள் சம்பளத்தில் 4 சத விகிதத்தைச் செலுத்தவேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஈ) நியமிக்கப்படுபவர்கள், குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு உரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறி கொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(உ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப் பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை விடயமாக முறையான தகைமைபெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(ஊ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம், பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் அல்லது அதற்கப்பால் உறுதிப்படுத்தப்படுவதற்கு உட்பட்டதாக அமையும்.

(எ) விண்ணப்பிப்பவர்கள் தங்கள் வயதுக்கத்தாட்சியாக தமது பிறப்புப் பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். சத்தியக் கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவுச் சான்றிதழ்ப் பிரதிகள் சேர்த்து அனுப்பப்படாவிட்டால் விண்ணப்பிப்பவர்கள் அருகதையற்றவர்களாகக் கருதப்படுவர்.

4. புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(i) எப்பதவிக்கேனும் நீடிய காலம் விதிக்கப்பட்டாலன்றி, காரியத்துக்கேற்ப, இளைப்பாற்றிச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றிச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்"களின் தகுதிகாண் நிலைப்/பரீட்சார்த்த காலம் இரண்டு ஆண்டுகளாயிருக்கும்.

(ii) "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை வினைப்படுத்துதற்கும் குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட ஏற்பாடுகளைச் செயற்படுத்துதற்குமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் விதிகள் எதற்கும் அமைந்தொழுகுமாறு வேண்டப்படுவர்.

(iii) (அ) இந்த உத்தியோகத்தர்கள் அவர்களின் தகுதிகாண் நிலைப்/பரீட்சார்த்த காலத்தில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுவர்.

(ஆ) தகுதிகாண் நிலைப் பரீட்சார்த்த காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை, பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் சிங்களத்தில் தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியெய்துவதைப் பொறுத்ததாயிருக்கும். குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்த தேர்ச்சிகாண் பரீட்சைகளில் சித்தியடையத்தவறினால் வேதனப் பெருக்கு இடைநிறுத்தப்படும். குறிப்பிட்ட காலவரையறையையும் கடந்த நீடித்த காலவரையுள் சித்தியடையத் தவறினால், வேதனப் பெருக்கின் இடைநிறுத்தம் பூரணமாகவே நிறுத்தப்பட்டதாகிவிடும். பரீட்சை சித்தியடையும் காலம்வரை இப்பூரண நிறுத்துகை செயற்படும். (13,387 இலக்கத்தையும், 9.11.62 தேதியையும் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை உத்தியோக கரும மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளைப் பார்க்கவும்).

(இ) கல்வியும் ஏனைய தகைமைகளும்

சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக்குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லா சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற சிங்களப் பரீட்சார்த்தி, சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான பரீட்சையில், சிங்கள மொழியில் அல்லது அதற்குச் சமமானதில், சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ந் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையில் உள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெற விரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

(ஈ) வினைத்திறமைகாண் தடைகள்

புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் தமது பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்தில், சிங்கள மொழியில் விதிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருக்கும். சித்தியடையத் தவறினால் உத்தியோகத்தரின் வேதனப் பெருக்கம் முதலில் இடைநிறுத்தப்படும். இரண்டாவதாக, நிறுத்தப்படும், அதன்பின் பின்போடப்படும்.

(iv) சிங்கள மொழிமூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் சிங்களத்தில் நடக்கும் தேர்ச்சிகாண் பரீட்சையிலிருந்து தவிர்த்துவிடப்படுவர்.

(v) தகுதிகாண் நிலைக்/பரீட்சார்த்த கால முடிவில், சிங்களத்தில் விதித்த தேர்ச்சிகாண் தரத்தை எய்தமுடியாவிட்டால், உள்ளூராட்சிச் சேவை நிபந்தனைகள் 21 னதும் 22 னதும் ஏற்பாடுகள் பொருத்தமாகும்.

"(மேற்சொன்ன (iii) (அ), (ஆ) (iv) ஆகியவை, தமிழ்/ஆங்கில மொழிமூலம் சேர்க்கப்பட்டவர்களுக்கே பொருத்தமாகும்)".

குறிப்பு.—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது 1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் எனப் பொருள்படுகின்றது.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதையும் திருபதிகரமாக நிரூபிக்கவேண்டும். உள்ளூராட்சிச் சேவைக்கு ஆட்சேர்த்தல் பற்றிய சகல தேவைகட்கும் "இலங்கையர்" என்னும் பதத்திற்கு வம்சாவழியில் அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவுள்ளவர் என்று வரைவிலக்கணம் கூறப்படுகிறது.

**6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை ;**

(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக்கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, க்ரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவைசெய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிக்குமுரிய புதிய நியமனத்திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக்குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக்குறைவான பரீட்சையைத் தமது மிகக்குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிககப்படுவர்.

**7. வயதுச் சலுகை.**—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவிகள் வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

**8. வேண்டற்பால ஏனையவை.**—(i) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகர சங்க அதிகாரி அல்லது தலைவர் மூலமாக அனுப்பபபடுதல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில் விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன்பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

(iv) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுக்கப்படுதற்கு எவ்விதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(v) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிக்குமுன்னர் காணப்படின் விண்ணப்பதாருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(vi) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(vii) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்படவேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக் கூடாது."

(viii) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

**முக்கியமாக கவனிக்க.**—(i) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை, தபாற் பெட்டி 530, கொழும்பு 1 என்ற விலாசத்தை அடையும்வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை தலைவரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(ii) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைச் சித்தஞ்செய்யுமுன்னர் மேற்போந்த பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(iii) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்:—(1) பிறப்புச் சான்றிதழ், (2) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (3) குணச் சான்றிதழ், (4) பதவி அத்தகைய் தன்மையதாயின் உயர் தொழில்/தொழிநுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(iv) விண்ணப்பக்காரர் மேற்போந்த பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

........................(........) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

   (ஆ) ........................ பதவிக்கான விண்ணப்பம்.
   முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.

2. தேசிய இனம் : ————.
   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா இலங்கையரல்லாதாரா என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாகவிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

3. தபால விலாசம் : ————.
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : ————.
   ..........வருடங்கள் ........மாதங்கள்......நாட்கள்
   (ஆ) பிறந்த திகதி : ————.

5. பிறந்த இடம் :
   (அ) விண்ணப்பக்காரர் : ————.
   (ஆ) அவரது பிதா : ————.
   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.
   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.

   (விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) யையும் அல்லது (இ) யையும் (ஈ) யையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா, தனியாளா, தாரமிழந்தவரா அல்லது கைம் பெண்ணா ? : ———

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கலலூரிகளும் மற்றும் தாபனங்களும் : ———.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழிலநுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. ........ | ........ | ........ | 1. ........ | ........ | ........ |
| 2. ........ | ........ | ........ | 2. ........ | ........ | ........ |
| 3. ........ | ........ | ........ | 3. ........ | ........ | ........ |
| 4. ........ | ........ | ........ | 4. ........ | ........ | ........ |
| 5. ........ | ........ | ........ | 5. ........ | ........ | ........ |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் ———.
(அ) சிங்களம் : ———.
(ஆ) ஆங்கிலம் : ———.
(இ) தமிழ் : ———.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ———.

10. கல்வி பயின்ற பாடசாலையும் அதைவிட்ட திகதியும் : ———.

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ———.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ———.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ———.
(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—
(i) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ———.
(ii) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக சம்பள அளவுத் திட்டமும் : ———.
(iii) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? : ———.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ———.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும், பேச்சை மொழி பெயர்க்கும் தேர்ச்சியுண்டா ?
(அ) சிங்களம் :———.
(ஆ) தமிழ் : ———.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விவரங்களையும் திகதிகளுடன் தருக) : ———.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ———.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ———.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ———.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியதில்லை : ———.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், தெரிவுக்கு முன்னர், தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி, வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ———.

தலைவர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 550,
கொழும்பு 1.

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### மருத்துவிச்சி பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. தகைமைகள், அனுபவத்திற்கு இணங்க, பின்வரும் வேதன அடிப்படையில், உரிய ஒரு படியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி நியமிக்கப்படக் கூடும்.

**வேதனம் :**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு :—வருடாந்தம் ரூ. 666—15 X 42—1296. வருடாந்தம் ரூ. 1,086 பெறுமுன் வினைத்திறனைகாண் தடையுண்டு.

3. வேண்டப்படும் தகைமைகள் :—

(அ) வயது : 17.1.67 ல் 50 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(ஆ) பரீட்சார்த்திகள் க.த.ப. பரீட்சை (சிங்களம்) யில் சித்தியடைந்திருப்பதுடன், பதிவு செய்யப்பட்ட மருத்துவிச்சிகளாகவும் இருத்தல் வேண்டும். சுகாதார சேவைகள் அதிகாரியிடமிருந்து தகுதிச் சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும். சுகாதார அணி வேலைகளில் அனுபவம் பெற்றிருப்பவர்களும், சிங்களம், தமிழ் மொழிகளில் பேசக்கூடியவர்களும் விரும்பப்படுவர்.

4. இந்த அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் 4 வது பகுதியில் உள்ள உள்ளூர் ஆட்சி சேவைப்பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப்பட வேண்டும். 17.1.67 திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

6. விண்ணப்பங்களும் அது சம்பந்தமான தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைத் தலைவருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக் கூடாது.

7. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப்பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

8. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் முடிவு திகதியின்பின் இருவாரங்களுக்குள் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1
16.12.1966.

12-1395—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உள்ளூர் ஆட்சிச் சேவை
## பொது சுகாதார தாதி பதவிகள்

14.10.66 ந் தேதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரங்களின் 4 வது பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமான அறிவித்தலின் தொடர்பாக எழுதுவது, மேற்படி பதவிகளுக்குப் பின்வரும் உத்தியோகத்தர்களை உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை தயைகூர்ந்து நியமித்துள்ளது :—

1. திருமதி. சி. தனபால, சந்தனப்பிட்டி வீதி, அம்புல்தெனிய, நுகேகொட.

2. திருமதி. கே. டி. பேமசீலி, 67, கூட்டுறவுச் சங்கம், மே/பா, வேரகல, பாதுக்க.

3. திருமதி. டி. எஸ். ஹப்புவாராச்சி, பணியாளர் தாதி, அரசாங்க வைத்தியசாலை, ஹோராணை.

உடனடியாகவே இவர்களுக்கு நியமனங்கள் கொடுக்க அதிகாரசபை கையேற்பதில்லை. சேவையில் வெற்றிடங்கள் வந்தாலும், வரும்பொழுதும் இவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

டபிள்யூ. ஏ. விஜேசிங்ஹ,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530, கொழும்பு-1.
17.12.1966

12-1394—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

# துணை விதிகள்

## வத்தேகமை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமாம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ), 153 ஆகிய பிரிவுகளுக்கமைவாக வத்தேகமை நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1966 திசெம்பர் 17 ம் திகதி.

### துணைவிதி

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ)ம் பிரிவுக்கமைவாக அறவிடப்படுவதும், 1965, திசம்பர் 31 ன் 14,601 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, 1965, திசம்பர் 20 ந் திகதியைக் கொண்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதுமான 1966 ம் ஆண்டுக்குரிய விசேஷ தண்ணீர் வரியிலிருந்து இதன் கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட மனைத்தலங்கள் தவிர்க்கப்படும்.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் :—

**1 ம் இல. வட்டாரம்**

எல்கடுவை வீதி. —

இல. 19, 19/1, 85, 96, 2/1, 2/2, 24/5, 50, 50/2, 50/3, 50/4, 50/9, 50/10, 50/20, 50/25, 50/31, 50/37, 50/38, 50/50, 54/1, 54/5, 54/6, 80, 90, 100, 110, 120.

மாத்தளை ரோட்டு இல.—

இல. 129/1, 141/6, 141/11, 155, 155/1, 155/2, 155/3, 157, 157/1, 157/2, 157/6, 167, 175/1, 175, 175/2, 175/3, 175/4, 175/5, 175/6, 175/7, 175/8, 175/9, 175/10, 175/11, 195, 211, 219, 219/1, 102, 110, 110/1, 110/2, 110/3, 120, 120/1, 158, 160, 162/1, 164, 168, 170.

நுவரதென்ன பாதை. இல.—

இல. 45, 65, 71, 71/1, 85, 89, 96, 45/2, 45/3, 67, 45/7, 50, 72.

**2 ம் இல. வட்டாரம்**

குடுகலே ரோட்டு இல.—

இல. 54, 56, 70, 70/1, 92, 120, 126, 126/1, 150, 156.

மாத்தளை ரோட்டு இல.—

இல. 75/15, 75/16, 75/17, 75/18, 75/19, 75/20, 75/29, 75/43, 75/44, 75/48, 75/49, 75/50, 75/51, 75/52, 75/55, 75/60, 75/61, 75/62, 75/63, 75/64, 75/65, 75/87, 75/89, 75/94, 75/95, 75/96, 75/90, 75/97, 75/98, 75/99, 75/100, 75/101.

உடுருவன ரோட்டு இல.—

இல. 7/1, 7/3, 7/4, 7/5, 7/6, 7/7, 7/8, 7/9, 7/10, 7/11, 7/12, 7/14, 7/17, 39, 41, 34.

உடுருவனே பாதை இல.—

இல. 14, 14/1, 14/2, 14/3, 14/4, 26, 30, 30/1.

**3 ம் இல. வட்டாரம்**

உடுகொடை ரோட்டு இல.—

இல. 35, 20, 22, 24, 18, 26, 26/1, 26/2, 28, 30, 32, 34, 36, 38, 40, 42, 44, 33 (அ).

**4 ம் இல. வட்டாரம்**

கூணபில்லே எஸ்டேட் இல.—

இல. 55, 55/1, 55/2, 55/3, 55/4, 55/6, 55/7, 55/8, 55/11, 55/20, 55/25, 55/30, 10, 30, 50, 50/1, 50/2, 50/3, 50/5, 50/6, 50/7, 50/9, 50/10, 50/11, 60.

பன்விலே ரோட்டு இல.—

இல. 175, 205, 205/1, 211, 215, 215/1/1, 219, 219/1/1,229 229/5 229/8, 229/9, 229/10, 229/11, 229/12, 229/13, 239, 255, 167, 150, 152, 156, 158, 160.

**5 ம் இல. வட்டாரம்**

அத்தலகொட பாதை இல.—

இல. 11, 21, 21/1, 21/10, 21/11, 21/12, 21/13, 21/15, 21/17, 21/18, 21/21, 21/23, 21/25, 21/26, 21/30, 21/35, 21/36, 21/37, 21/40, 21/46, 21/54, 21/55, 21/56, 21/57, 21/58, 21/59, 21/60, 35, 45, 45/3, 45/4, 55.

கொறகிற்றியாதொனியா பாதை இல.—

இல. 5, 25/1, 25/2, 25/5, 25/7, 25/8, 8, 10, 20, 20/1.

நாரந்தனை பாதை இல.—

இல. 1, 1/1, 15, 15/2, 15/4, 15/6, 15/7, 15/11, 35, 35/1, 37, 37/1, 37/4, 41, 45, 51, 51/1, 51/3, 85, 85/1, 85/2, 85/3, 95, 95/1, 95/4, 95/5, 105, 105/1, 105/2, 105/3, 105/4, 105/5, 105/6, 125, 10/5, 10/6, 16,30 30/1, 30/2, 30/3, 38, 40, 42, 42/5, 42/10, 42/11, 42/12, 42/13, 42/14, 42/15, 42/20, 42/24, 42/25, 42/28, 42/29, 42/30, 46, 50 50/1, 50/5, 60, 62, 64, 64/4, 64/8, 70, 78, 78/1, 86, 90, 92, 94, 94/1, 94/2, 94/3, 94/5, 100, 110, 112, 114, 120, 124, 126, 130, 130/1.

பன்விலே ரோட்டு இல.—

இல. 86/4, 86/5, 86/6, 86/7, 86/8, 86/9, 86/10, 86/15, 86/16, 86/18, 86/22, 86/24, 86/25.

பிற்றியகெதறை பாதை இல.—

இல. 1, 1/2, 3, 3/1, 3/2, 3/3, 11, 15, 15/1, 2, 4, 10, 10/1, 20.

தபாற் கந்தோர் ரோட்டு இல.—

இல. 57/12, 57/15, 57/16, 57/17, 57/18, 57/20, 57/22, 57/25, 57/27.

வாவின்ன பாதை இல.—

இல. 1, 7, 7/1, 7/2, 7/3, 15, 21, 21/1, 21/2, 25, 33, 41, 55, 55/1, 55/2, 55/3, 55/4, 55/5, 55/6, 55/7, 55/8, 55/9, 55/10, 55/11, 55/12, 10, 20, 20/1, 20/2, 30, 40, 40/1, 40/2, 40/3, 40/4, 40/5, 40/6, 40/7, 40/8, 50, 56.

**6 ம் இல. வட்டாரம்**

அத்தலகொடை பாதை இல.—

இல. 18, 20/9, 20/11, 20/12, 20/14, 20/15, 20/16, 20/17, 20/18, 20/19, 20/20, 20/21, 20/26, 20/27, 20/28, 20/29, 20/30, 20/32, 20/33, 20/34, 20/37, 20/45, 20/46, 30, 48/3, 48/6, 48/7, 48/8, 56/6, 56/9, 56/11, 56/12, 56/15, 60, 62.

கண்டி ரோட்டு இல.—

இல. 65, 109, 115, 119, 123, 129, 135, 218/8, 218/9, 244/1, 270, 270/1, 280, 280/1.

**7 ம் இல. வட்டாரம்**

கண்டி ரோட்டு 186

குடுகலே ரோட்டு இல.—

இல. 15, 15/1, 21/5, 21/8, 21/10, 21/15, 21/18, 21/19, 27, 29, 29/5, 29/6, 29/7, 29/8, 29/9, 29/10, 29/15, 29/16, 29/17, 29/18, 29/35, 29/40, 29/45, 29/47, 29/48, 29/55, 29/56, 29/60, 29/61, 29/62, 29/65, 29/70, 29/72, 29/74, 29/75, 35, 57, 65, 75, 101, 109, 109/1, 111, 113, 109/2, 10, 20, 20/1, 20/2, 28, 28/1, 40, 50.

கலதெனியாபாதை இல.—

இல. 15, 10, 10/1, 12, 18, 20, 22, 24, 26, 28, 30, 30/1, 30/7, 30/9, 30/10, 30/15, 60, 70.

உடுருவன பாதை இல.—

இல. 7/1, 15/1, 15/2, 15/3.

12–1328—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

எல். டி—பீ 131 /33

## நாவலப்பிட்டி நகர சபை

### நகர சபைக் கட்டளைச் சட்டம்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ், நாவலப்பிட்டி நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் பிரகாரம் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு,
18.12.1966.

**துணைவிதிகள்**

பின்வரும் தொழில்கள் அருவருப்பும் அபாயமுமுள்ள தொழில்களெனக் கருதப்படும் :—ஒரு கால்நடைத் தீனிப்பண்டகசாலை வைத்தல், 50 பை சீமெந்திற்கு மேற்பட இருப்பில் வைத்திருத்தல், ஒரு ஒளிப்பட நிலையம் வைத்திருத்தல், ரேடியோப் பெட்டிகள் மின்சார உபகரணங்கள் பழுதுபார்க்கும் ஒரு வேலைத்தலம் வைத்தல், மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் ஒரு கராச்சு வைத்திருத்தல், கறிச்சரக்கு அரைக்கும் ஆலை வைத்தல், தேயிலை உற்பத்தி செய்யும் உற்பத்திச் சாலை வைத்தல், சைக்கிள் பழுதுபார்க்கும் நிலையம் வைத்தல், கல் தோண்டும் இடம் வைத்தல், பாட்டரிகட்கு மின் ஊட்டும் நிலையம் வைத்தல்.

12–1326—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

## பேருவல நகரசபை

### நகரசபைக் கட்டளைச் சட்டம்

*நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 153 ஆம் 157 ஆம் பிரிவுகளின் கீழ், பேருவல நகரசபையால் ஆக்கப்பட்டு, இக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ்த் தமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை-விதிகள்.*

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு.

**துணை-விதிகள்**

1. பின்வருவன அபாயகரமான தொழில்களெனக் கருதப் படுதல் வேண்டும் :—வெற்றுச் சாக்குகள் இருப்பில் வைத்தல், மின்சார வேலைத்தலம் வைத்தல், ஆபரணம் உற்பத்தி செய்ய ஓர் நிலையம் வைத்தல், ஓர் அச்சுக்கூடம் வைத்தல், ஓர் உலை-கம்மாலை வைத்தல், மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் ஓர் நிலையம் வைத்தல், சீமெந்து இருப்பில் வைத்திருத்தல், குழிதோண்டி முருகைக்கல் எடுத்தல், அரைக்கும் ஆலை வைத்தல், தும்பு உற்பத்தி செய்தல், ஒச்சியின் வாயு பிரயோகிக்கப்படும் ஓர் கம்மாலை வைத்தல், உலர்த்திய தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல், வாயுப்பானத் தொழிற்சாலை வைத்தல், கார் செப்பனிடும் நிலையம் வைத்தல், சைக்கிள் பழுதுபார்க்கும் அல்லது செப்பனிடும் நிலையம் வைத்தல், வானொலிப் பெட்டி பழுதுபார்க்கும் கடை வைத்தல், கயிறு அல்லது தும்பு உற்பத்தி செய்தல், சுண்ணாம்புக்கல் இருப்பில் வைத்திருத்தல், கரி உற்பத்தி செய்வதற்கு சிரட்டை அல்லது விறகு எடுத்தல், பெட்ரோல் கடை வைத்தல், மண்ணெண்ணெய்க் கடை வைத்தல், தகர வேலைக்கடை வைத்தல், மின் மூலாம் பூசும் நிலையம் வைத்தல், வல்கனைட்டால் ரயர், ரியூப் ஒட்டும் நிலையம் வைத்தல், கொப்பரா உற்பத்தி செய்தல் அல்லது இருப்பில் வைத்திருத்தல், அரிசி ஆலை அல்லது நெல்குத்தும் பொறி வைத்திருத்தல்.

2. பின்வரும் தொழில்கள் அருவருப்பூட்டுந் தொழில்களெனக் கருதப்படும் : 3 அந்தருக்கு மேற்பட்ட பதனிட்ட மீன் அல்லது கருவாடு இருப்பில் வைத்திருத்தல், பழுதடையத்தக்க உணவுப் பண்டங்கள் இருப்பில் வைத்திருத்தல், விணாகிரி உற்பத்தி செய்தல், சோப்பு உற்பத்தி செய்தல், மிருகத் தோல் அல்லது எலும்பு இருப்பில் வைத்திருத்தல், செயற்கை உரம் இருப்பில் வைத்திருத்தல் அல்லது செயற்கை உரத்தயாரிக்கத் தேவையாகும் பொருள்கள் இருப்பில் வைத்திருத்தல், சுருட்டு உற்பத்தி செய்தல், பீடி உற்பத்தி செய்தல், கள் சேர்க்கும் நிலையம் வைத்தல், மீனுக்கு ஐஸ் போடுதல், புகையிலை உலர்த்துதல் அல்லது பதனிடல், மரக்காலை வைத்தல், செங்கல் அல்லது ஓடு இருப்பில் வைத்திருத்தல், தேங்காய் மட்டை ஊறவைக்க ஓர் நீர்க்குட்டை வைத்தல், விட்டுத்தளவாடம் உற்பத்தி செய்ய ஓர் நிலையம் வைத்தல், வெற்றுப் போத்தல் இருப்பில் வைத்திருத்தல், தச்சுவேலைத் தலம் வைத்தல், (3 அந்தருக்கு மேற்பட) பிண்ணாக்கு இருப்பில் வைத்திருத்தல், (10 சாக்குகட்கு மேற்பட) தானியம் பயறுவகை இருப்பில் வைத்திருத்தல், மீன்வால் உலர்த்துதல் அல்லது பதனிடல், விணாகிரி உற்பத்தி செய்தல் அல்லது போத்தலில் அடைத்தல்.

3. பின்வருந் தொழில்கள் அருவருப்பும் அபாயகரமுமான தொழில்களெனக் கருதப்படும் :—தும்பு சாயமிடுதல், பாட்டரிகட்கு மின்னூட்டல், சுண்ணாம்பு சூளை வைத்தல், பதனிடல் அல்லது இருப்பில் வைத்திருத்தல், ஓடு அல்லது செங்கல் உற்பத்திசெய்தல்.

*12-1327—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728*

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

*1961 ன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவுக்கமைவாக மாத்தறை மாவட்டத்து, வெல்லபொடைப்பற்றிலுள்ள கொட்டைகொடைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவால் தமக்களிக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.*

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
18.12.1966.

**கட்டடங்களும் எல்லைச் சுவர்களும் கட்டுவதுபற்றிய துணைவிதிகள்**

1. (1) எவரும் கிராமப் பிரதேசத்தினுள், புதிய கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் முகப்பு எதையும்—

(அ) கிராம வண்டித் தெரு எதனதும் மத்தியிலிருந்து பன்னிரண்டடி தூரத்துக்குள் ;

(ஆ) காலகெதியில் ஒரு கிராம வண்டித் தெருவாக மாற்றப்படவிருக்கும் பாதை எனச் சபையால் அறிவிக்கப்பட்ட கிராமப் பாதை எதனதும் மத்தியிலிருந்து பன்னிரண்டடி தூரத்துக்குள், அல்லது,

(இ) (ஆ) என்னும் உப-பந்தியில் குறிப்பிடப்பட்டதல்லாத கிராமக் காலடிப்பாதை அல்லது இடுக்குத் தெரு எதனதும் மத்தியிலிருந்து ஆறடி தூரத்துக்குள் கட்டலாகாது.

(2) முப்பது நாட்களுக்கு முன்னர் அதுபற்றித் தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுக்காது இத்துணைவிதிகளின் (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வண்டித் தெரு, ஒரு பாதை அல்லது இடுக்குத் தெரு எதனதும் ஓரமாக கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாயில் முகப்பு எதனையும் கிராமப் பிரதேசத்துள் எவரும் எழுப்பலாகாது.

2. இத்துணை விதிகளில்—

"தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும்.

"சபை" எனில் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை எனப்பொருள்படும்.

"கிராமப் பிரதேசம்" எனில் மாத்தறை மாவட்டத்து வெல்லபொடைப் பற்றிலுள்ள கொட்டைகொடைக் கிராமப் பிரதேசம் எனப் பொருளபடும்.

*12-1441—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728*

## வத்தேகமை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ), 153 ஆகிய பிரிவுகளுக்கமைவாக வத்தேகமை நகர சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு டிசம்பர் மீ 18 ந் உ.

### துணைவிதி

(255ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 130 (ஆ) ம் பிரிவுக்கமைவாக அறவிடப்படுவதும், 1965, திசம்பர் 31 ன் 14,601ம் இலக்கக் கசற்றில் பிரசுரிக்கப்பட்ட, 1965 திசம்பர் 20 ந் திகதியைக் கொண்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதுமான 1966 ம் ஆண்டுக்குரிய விசேஷ மலகூட வரியிலிருந்து இதன் கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட மனைத்தலங்கள் தவிர்க்கப்படும்.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் :—

#### 1ம் இல. வட்டாரம்

எல்கடுவை வீதி :

15/1, 19, 19/1, 25, 27, 29, 31, 45, 47, 55, 63, 85, 95, 2, 2/1, 2/2, 12, 14, 18, 24/5, 50, 50/2, 50/3, 50/4, 50/9, 50/10, 50/20, 50/25, 50/31, 50/37, 50/38, 50/50, 50/51, 50/52, 54/1, 54/5, 54/6, 56, 58, 68, 68/2, 68/3, 68/4, 68/5, 80, 90, 100, 110, 120.

மாத்தளை வீதி :

87, 109, 127, 129, 129/1, 141/4, 141/5, 141/6, 141/10, 141/11, 142/12, 149, 155, 155/1, 155/2, 155/3, 157, 157/1, 157/2, 157/6, 159, 167, 175/1, 175/2, 175/3, 175/4, 175/5, 175/6, 175/7, 175/8, 175/9, 175/10, 175/11, 195, 211, 219, 219/1, 83, 90, 96, 100, 102, 110, 110/1, 110/3, 120/1, 158, 160, 162/1, 164, 168, 170, 88.

நுவரதென்னைப் பாதை இல.

45, 65, 71, 71/1, 85, 89, 95, 45/2, 43/3, 67, 72, 50, 45/7.

#### 2ம் இல. வட்டாரம்

கடுகல றோட்டு இல.

54, 70, 70/1, 80, 84, 84/1, 86, 92, 94, 96, 98, 106, 120, 126, 126/1, 150, 156, 56.

மாத்தளை றோட்டு இல.

33, 35, 57, 75/15, 75/16, 75/17, 75/18, 75/19, 75/20, 75/21, 75/23, 75/25, 75/26, 75/29, 75/30, 75/31, 75/35, 75/43, 75/44, 75/48, 75/49, 75/50, 75/51, 75/52, 75/53, 75/55, 75/61, 75/62, 75/63, 75/64, 75/65, 75/70, 75/72, 75/73, 75/74, 75/76, 75/79, 75/80, 75/80 (எ), 75/81, 75/85, 75/87, 75/89, 75/90, 75/94, 75/95, 75/96, 75/97, 75/98, 75/99, 75/100, 75/101.

உடுறவனை பாதை இல.

14, 14/1, 14/2, 14/3, 14/4, 26, 30, 30/1.

உடுறவனை றோட்டு இல.

7/1, 7/3, 7/4, 7/5, 7/6, 7/7, 7/8, 7/10, 7/11, 7/12, 7/14, 7/17, 11, 21, 39, 41, 8, 34, 50.

#### 3 ம் இல. வட்டாரம்

பன்விலை றோட்டு இல.

1, 137, 157, 159/5.

நுவரதென்னைப் பாதை இல.

4, 6, 12, 16, 18, 22, 24, 38.

உடுகொடை றோட்டு இல.

35, 35/2, 35/3, 20, 22, 24, 18, 26, 26/1, 26/2, 28, 30, 32, 34, 36, 38, 40, 42, 44, 33 (எ).

#### 4ம் இல வட்டாரம்

கோணபில்லை எஸ்டேட் றோட்டு இல.

55, 55/1, 55/2, 55/3, 55/4, 55/6, 55/7, 55/8, 55/1/1, 55/20, 55/25, 55/30, 10, 30, 50, 50/1, 50/2, 50/3, 50/5, 50/6, 50/7, 50/9, 50/10, 50/11.

பன்விலை றோட்டு இல.

159, 163, 175, 205, 205/1, 211, 215, 215/1/1, 219, 219/1/1, 229, 229/5, 229/8, 229/9, 229/10, 229/11, 229/12, 229/13, 239, 255, 167, 90, 92, 100, 150, 152, 156, 158, 160.

#### 5ம் இல வட்டாரம்

அத்தலகக்கொட பாதை இல.

11, 21, 21/1, 21/10, 21/11, 21/12, 21/13, 21/15, 21/17, 21/18, 21/21, 21/23, 21/25, 21/26, 21/30, 21/35, 21/36, 21/37, 21/46, 21/54, 21/56, 21/55, 21/57, 21/58, 21/59, 21/60, 29, 35, 35/1, 35/7, 43, 45/3, 45/4, 49, 55.

கொற பிற்றிய தெனியா பாதை இல.

5, 25/1, 25/2, 25/5, 25/7, 25/8, 8, 10, 12, 12/1, 12/2, 12/3, 20, 20/1.

நாரந்தனை பாதை இல.

1, 1/1, 15, 15/2, 15/4, 15/6, 15/7, 15/11, 35, 35/1, 37, 37/1, 37/4, 41, 45, 51, 51/1, 51/3, 85, 85/1, 85/2, 85/3, 95, 95/1, 95/4, 95/5, 105, 105/1, 105/2, 105/3, 105/4, 105/5, 105/6, 125, 10, 10/5, 10/6, 10/9, 10/10, 20, 30, 30/1, 30/2, 30/3, 38, 40, 42, 42/5, 42/10, 42/11, 42/12, 42/13, 42/14, 42/15, 42/20, 42/24, 42/25, 42/28, 42/29, 42/30, 46, 50, 50/1, 50/5, 60, 62, 64, 64/4, 64/8, 70, 78, 78/1, 86, 90, 92, 94, 94/1, 94/2, 94/3, 94/5, 100, 110, 112, 114, 120, 124, 126, 130, 130/1, 12/1 (எ), 12/1.

பன்விலை றோட்டு இல.

78/19, 86/4, 86/15, 86/16, 86/18, 86/22, 86/24, 86/25, 1.05

பிற்றியகெதறை பாதை இல.

1, 1/2, 3, 3/1, 3/2, 3/3, 11, 15, 15/1, 2, 4, 10, 10/1, 20.

தபாற் கந்தோர் றோட்டு இல.

37/1, 57/10, 57/12, 57/14, 57/15, 57/16, 57/17, 57/18, 57/20, 57/22, 57/25, 57/27, 57/5, 57/6, 57/7, 57/8, 12, 57/9.

றெயில்வே ஸ்ரேசன் றோட்டு இல.

8/15, 2, 1.

வாவின்னைப் பாதை இல.

1, 7, 7/2, 7/3, 15, 21, 21/1, 25, 33, 41, 55, 55/1, 55/2, 55/3, 55/4, 55/5, 55/6, 55/7, 55/8, 55/9, 55/11, 55/12, 20, 10, 20/1, 20/2, 30, 40, 40/1, 40/2, 40/3, 40/4, 40/5, 40/6, 40/7, 40/8, 50, 56, 21/2, 55/10, 2.

#### 6ம் இல வட்டாரம்

அத்தலகொட பாதை இல. 2.

2, 10, 10/1, 10/3, 14, 18, 20, 20/9, 20/11, 20/12, 20/14, 20/15, 20/16, 20/17, 20/18, 20/19, 20/21, 20/26, 20/27, 20/28, 20/29, 20/30, 20/32, 20/33, 20/34, 20/37, 20/45, 20/46, 30, 40, 48, 48/3, 48/6, 48/7, 48/8, 56/6, 56/9, 56/11, 56/12, 56/13, 60, 2, 20/20, 62.

கண்டி றோட்டு இல.

5, 57, 69, 71, 73, 83/1, 95, 93/6, 95/7, 95/8, 97, 103/1, 109, 115, 119, 123, 129, 135, 218/4, 224, 240, 244/1, 232, 270, 270/1, 280, 280/1, 250/1, 250, 250/3.

#### 7ம் இல வட்டாரம்

கண்டி றோட்டு இல.

90, 90/1, 98, 98/1, 104, 104/1, 104/2, 104/3, 104/4, 122, 154/1, 154/2, 168/எ /1, 168/எ /2, 174, 190, 202, 208.

குடுகல றோட்டு இல.

15, 15/1, 21/3, 21/8, 21/10, 21/15, 21/18, 21/19, 27, 29, 29/5, 29/6, 29/7, 29/8, 29/9, 29/10, 29/13, 29/16, 29/17, 29/18, 29/35, 29/40, 29/45, 29/47, 29/48, 29/55, 29/56, 29/60, 29/61, 29/62, 29/65, 29/70, 29/71, 29/72, 29/74, 29/75, 35, 57, 65, 65/5, 75, 77, 101, 109, 109/1, 111, 113, 10, 10/1, 20, 20/1, 20/2, 20/3, 28, 28/1, 40, 50, 10/2, 109/2.

கலதெனியா பாதை இல.

10, 10/1, 12, 18, 30/7, 30/9, 30/10, 30/15, 60, 70.

உடுறவன்ன பாதை இல.

7/1, 15, 15/1, 15/2, 15/3.

12–1324——30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ், அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை மேற்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் தமக்கு அளிக்கப் பட்ட அதிகாரப்படி உள்ளூர் ஆட்சி அமைச்சரால் அங்கீ கரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 13.12.1966.

### துணைவிதிகள்

### கிராமச் சந்தைகளும் முறைச் சந்தைகளும்

1. ஒவ்வொரு சந்தையினதும் சந்தைப் பிரதேசம் என்பது, சபையினால் தாபிக்கப்பட்டுள்ள கிராமச் சந்தை, முறைச் சந்தை ஒவ்வொன்றிலுமிருந்து ஒரு மைல் விட்டமுள்ள ஒரு வட்டத்துள் அடங்கிய பிரதேசம் ஆகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

2. சபையால் தாபிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு சந்தை யிலும் முறைச் சந்தையிலும் உள்ள ஏதாவதொரு சாலையை, ஆசனத்தை அல்லது இடத்தை, உபயோகிக்கும் ஒவ்வொரு வரும் அவ்விதம் உபயோகிப்பதற்குப் பின்வரும் விகிதப்படி கட்டணம் கட்டல் வேண்டும் :—

| | ரூ. ச. |
|---|---|
| (1) நிரந்தரமான சாலை ஒவ்வொன்றிற்கும் ... | 1 25 |
| (2) தற்காலிகமான சாலை ஒவ்வொன்றிற்கும் ... | 75 |
| (3) 9 சதுர அடிக்குக்கூடாத ஒவ்வொரு தரைப் பரப்பிற்கும் ... | 25 |
| (4) 9 சதுர அடிக்கு மேற்பட்டும், 16 சதுர அடிக்கு உட்பட்டுமுள்ள ஒவ்வொரு தரைப் பரப்பிற்கும் ... ... | 35 |
| (5) 16 சதுர அடிக்கு மேற்பட்டும் 30 சதுர அடிக்குட்பட்டுமுள்ள ஒவ்வொரு தரைப் பரப்பிற்கும் ... ... | 50 |

### உத்தியோகத்தர்களும் பணியாட்களும்

3. கிராமச் சபைக்கு வருமதியாயுள்ள வரிப்பணங்கள் எல்லாவற்றையும் கட்டணங்கள் எல்லாவற்றையும் திரட்ட வும், திரட்டப்பட்ட தொகைகட்குத் தலைவரின் படியுருவக் கையொப்பமும் சபையின் பொறியும் இட்ட அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுகளை வழங்கவும், தலைவர் ஒரு உத்தியோகத்த ருக்கு அல்லது வேறொருவருக்கு எழுத்தில் அதிகாரம் வழங் கலாம்.

4. (அ) எவராயினும் வேண்டுமென்று—

கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அல்லது அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப் பட்ட ஒரு துணை விதியின் பிரகாரம் சபைத் தலை வருக்கு அல்லது சபையின் வேறெவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட, ஏதேனுமொரு தத்து வத்தை, கடமையை அல்லது பணியை அவர் பிரயோகிப்பதனில், புரிவதில் அல்லது ஆற்றுவதில், அல்லது

(ஆ) சபையால் அல்லது சபை சார்பாக அமர்த்தப்பட்ட ஒரு பணியாள் அல்லது ஒரு தொழிலாளி, தமக்குச் சபைத் தலைவரால் அல்லது சபையின் வேறெவ ரேனும் ஒரு உத்தியோகத்தரால் சட்டப்படி விதிக் கப்பட்ட கடமையைப் புரிவதில் தடைசெய்யக் கூடாது.

### பகிரங்க அறிவித்தல்கள்

5. சபையின் கட்டளைப்படி வெளிக்காட்டப்பட்ட ஒரு அறி வித்தலை எவரேனும் உருவழிக்கவோ, அழிக்கவோ கூடாது.

6. கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு துணைவிதியின் ஏதேனுமொரு வேலையை நிறைவேற்றுவதில் ஏற்பாடுகளிலேதாவதன்கீழ் தலைவரால் அல்லது அவருடைய உத்தரவின் கீழ், நிறுவப்பட்ட ஒரு அறிவித்தலில் குறிக்கப்பட்ட பணிப்புகளை எவராவது வேண்டுமென மீறுதல் அல்லது ஒரு அறிவித்தல் பலகையை, வேலியை, தம்பத்தை அல்லது தடை வேலியை அல்லது வேறொரு அமைப்பை நீக்குதல் ஆகாது.

### கட்டடங்கள், எல்லைச்சுவர்கள் ஆகியவற்றை நிர்மாணித்தல்

7. (1) எவராயினும்—

(அ) ஒரு கிராம வீதியின் மத்தியிலிருந்து 20 அடி தூரத்திற்குள் ; அல்லது

(ஆ) எதிர்காலத்தில் ஒரு கிராம வீதியாக மாற்றி அமைக் கப்படுமெனச் சபையால் அறிவித்தல் கொடுக்கப் பட்ட ஒரு கிராமப் பாதையின் மத்தியிலிருந்து, 20 அடி தூரத்தினுள் ; அல்லது

(இ) இப்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில் குறிக்கப் பட்டது தவிர்ந்த வேறொரு கிராமப் பாதையின் மத்தியிலிருந்து 7 அடி தூரத்தினுள்,

ஒரு கிராமப் பிரதேசத்துள் ஒரு கட்டிடத்தை அல்லது, ஒரு எல்லைச் சுவரை அல்லது ஒரு படலையை அமைத்தலாகாது.

8. முதலாவது துணைவிதியில் குறிக்கப்பட்டபடி, ஒரு கிராமப் பிரதேசத்தில், ஒரு கிராமப் பாதையில் அல்லது வீதியில் தலைவருக்கு எழுத்து மூலம் 30 நாட்கட்கு முன் அறிவித்தல் கொடுத்தல்லாது, ஒரு கட்டிடத்தையோ, எல்லைச் சுவரையோ, அல்லது படலையையோ எவராவது அமைத்த லாகாது.

### சலவைச்சாலைகள்

9. (1) வைத்திய சுகாதார உத்தியோகத்தரின் சிபார் சுடன் தலைவரிடம் இருந்து பெற்ற ஒரு அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவராக அவரிருந்தாலன்றி எவரேனும் ஒரு சலவைச்சாலையை வைத்தலாகாது.

(2) இத்துணைவிதியின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் அனுமதிப்பத்திரம் ஒவ் வொன்றும், அது எந்த வருடஞ் சம்பந்தமாக வழங்கப்பட்டதோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதத்தின் 31 ஆம் திகதியுடன் முடிவடையும்.

10. தலைவர் அல்லது தலைவரால் அதற்கென எழுத்தில் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், நியாயமான எல்லா நேரங்களிலும், ஒரு சலவைச்சாலையுட்புகுந்து பரிசோதனை செய்தலும் சலவைச்சாலைக்கு உபயோகிக்கப்படும் அல்லது அவ்விதம் தோற்றும் தொழிற்சாதனங்களையும், தளவாடங்களையும், ஏதனங்களையும், வாகனங்களையும் பரிசோதனை செய்தலும் சட்டமுறையானதாகும்.

11. சலவைச்சாலை வைக்கும் இடம் பின்வருவனவற்றுக் கியையவிருந்தாலொழிய சலவைச்சாலை வைக்கத் தலைவரால்

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எவராவது உரிமையுடையவராகார்.

(1) சலவைச்சாலை உள்ள இடம் நல்ல நிலைமையில் இருக்கவேண்டியதுடன் காற்றோட்டமும் போதிய விளக்குகளும் அமைக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையிலும் திறந்து மூடக்கூடிய யன்னல்களிருத்தல் வேண்டும். அந்த யன்னல்களின் பரப்பு திறந்திருக்கும் நிலையில் வெளிமட்டத்தரையில் 1/15 க்குக் குறையாத அளவில் இருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு அறையிலுமுள்ள சுவர்கள், 7 அடி உயரத்திற்குக் குறையாதனவாய் இருக்கவேண்டியதுடன், அவைகள் உட்புறத்தில் சுண்ணும்பு பூசப்பட்டுச் சுண்ணும்பு அடிக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

(3) அழுக்குத் துணிகள் இருப்பில் வைக்கப் புறம்பான ஒரு அறை இருத்தல் வேண்டும். இவ்வறையின் தரை சிமெந்திஞல் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) அழுக்குத் துணிகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குளத்தில் அல்லது கிணற்றில், ஆறென்றில் அதற்கெனச் சபையால் ஒதுக்கிவிடப்பட்ட ஒரு இடத்தில் தோய்க்கப்பட்டாலன்றி சலவைச்சாலை வைத்திருக்கப்பட்டிருக்கும் வளவில் சகல அலுவல்கட்கும் போதிய நீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) குழாய்நீர் வசதியிருந்து அது சலவைக்காரரால் உபயோகிக்கப்பட்டால், கழிவு நீர் போவதற்கு வடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) சலவைச்சாலையில் போதிய மலசலகூட வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அங்கு வேலை செய்யும் பத்து ஆட்களுக்கு ஒரு மலசலகூடம் என்ற விகிதத்தில், மலசலகூடங்கள் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

12. சலவைச்சாலை வைக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அழுக்குத் துணி இருப்பில் வைத்திருக்கப்படும் அறையின் உட்புறத்திற்கு வருடத்தில் 4 முறை முறையே மார்ச்சு, யூன், செத்தெம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களில் சுண்ணும்பு அடித்தல் வேண்டும்.

13. சலவைச்சாலை வைத்திருக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும், சலவைச்சாலையின் ஒவ்வொரு பாகத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும், வடிகால்களையும், தளவாடங்களையும் பாத்திரங்களையும் சலவைத் தொழிலுக்கு உபயோகிக்கப்படும் சாதனங்களையும் பழுது பார்த்துச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

14. சலவைச்சாலை வைக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒருவர் கிராமப் பிரதேசத்துக்கு வெளியேயிருந்து, அழுக்குத் துணிகளைக் கொண்டுவரக்கூடாது. மேலும் தொற்றுநோய், ஒட்டு நோய், தொடுநோய் ஆகியவற்றல் பீடிக்கப்பட்ட ஒருவரை, அல்லது அவர் அறியச் சமீப காலத்தில் பீடிக்கப்பட்டிருந்த ஒருவரை, அல்லது பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்குப் பணிவிடை செய்துவந்த ஒருவரைத் தொற்று நோய் முடிவதற்குரிய காலவெல்லை முடிவடையும்வரையும் , சலவைச்சாலைக்குட் பிரவேசிக்கவோ, சலவை வேலைகளில் பங்குபற்றவோ, சாமான்கள், புடவைகளை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லவோ விடக்கூடாது.

15. சலவைச்சாலை வைக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும், தனது சலவைச்சாலையில் ஏதாவது ஒரு தொற்று நோய் அல்லது தொடுநோய் வருஞ் சமயத்தில்—

(1) உடனடியாகச் சலவைத் தொழிலை நிற்பாட்டுதல் வேண்டும்;

(2) நோய் வந்ததைப்பற்றித் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும்;

(3) தலைவரிடமிருந்து எழுத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ளும் வரைக்கும், துணிகளை உரியவர்கட்குக் கொடாது வைத்திருத்தல் வேண்டும்;

(4) சலவைச்சாலை உள்ள இடம் தொற்று நோயினின்றும் விடுதலையாகிவிட்டதெனத் தலைவர் பிரகடனஞ் செய்யும் வரைக்கும் சலவைத் தொழிலைத் தொடர்ந்து நடத்தக்கூடாது.

16. சலவைச்சாலை வைக்க அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒருவர், தோய்த்த துணிகளை ஒரு படுக்கை அறையில் வைத்திருக்கக்கூடாது.

17. 9 ஆம் துணைவிதியின் கீழ் உத்தரவுப்பத்திரமொன்றுக்காகச் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், சபை கொடுக்கும் மாதிரிப்பத்திரத்தில் இருக்கவேண்டியதுடன்—

(அ) அத்தகைய விண்ணப்பம், புதியதொரு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காயின், சலவைத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 30 நாட்கட்கு முன்னரும்;

(ஆ) அத்தகைய விண்ணப்பம் அப்போதுள்ள ஒரு அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காயின், புதுப்பிக்கப்படவேண்டியது எந்த வருடஞ் சம்பந்தமானதோ அவ்வருடத்திற்கு முந்திவரும் செத்தெம்பர் மாதத்தின் 1 ஆம் திகதியில் அல்லது அதற்குமுன்னரும், தலைவரிடங் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

### மலசலகூட வேலையும் தோட்டிவேலையும்

18. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனத் துணை விதிகளின் VI ஆம் பகுதியிலடங்கிய 6 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்காக, சபைக்கு மாதா மாதம் கட்டப்படவேண்டிய மலசலகூடவேலைக் கட்டணம் எடுக்கப்படும் வாளி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ரூபாயாகும்.

19. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணை விதிகளின் VI ஆம் பகுதியிலடங்கிய II ஆம் துணை விதியின் நோக்கங்களுக்காக, சபைக்கு மாதம் மாதம் கட்டப்படவேண்டிய தோட்டிவேலைக் கட்டணம் 50 சதமாகும்.

### ஆயுள்வேத வைத்தியசாலைகள்

20. (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36(இ) பிரிவின் கீழ், சபையால் தாபிக்கப்பட்டுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகள், சபையால் பராமரிக்கப்பட்டுவருதல் வேண்டும். இவ்வைத்தியசாலைகள் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கமுள்ள ஆயுள்வேதச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, ஒரு ஆயுள்வேத வைத்தியரின் பரிபாலனத்தின் கீழ் இருத்தல் வேண்டும்.

21. 20 ஆம் துணைவிதியில் குறிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியர் அல்லது இதற்கெனச் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர், சபையால் விதிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலை சம்பந்தமான கணக்குப் புத்தகங்களையும் மற்றும் புத்தகங்களையும், சபை அங்கீகரித்த படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல் வேண்டும்.

22. ஆயுள்வேத வைத்தியசாலைகளைப் பராமரிப்பதற்கு வேண்டிய பணத்தை வருடாவருடம் சபையின் பொது நிதியிலிருந்து, சபை வழங்கலாம். வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில், அல்லது காலத்திற்குக் காலம் வகுக்கப்படும் குறைநிரப்பும் மானியத்தில் அத்தகைய தேவைக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

*23. 24 ஆம் துணைவிதியின் ஏற்பாடுகட்கு அமைய, ஆயுள் வேத வைத்தியசாலைகளில் நோயாளிகட்குச் செய்யப்படும் வைத்தியம் இலவசமாகவிருக்கவேண்டியதுடன் சம்மாந் துறை மேற்குக் கிராமப் பிரதேசத்திலுள்ள கிராம வாசி கட்கு மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும்.*

*24. கொடுபடும் மருந்துகளின் ஒரு பகுதிச் செலவைத் தாங்குவதற்கு சபை ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் 50 சதம் அறவிடலாம். சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மாதிரிப்பத்திரத்தில், தலைவர் அல்லது தலைவரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர், ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் திரட்டப்படும் பணத்திற்குச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் பற்றுச்சீட்டு வழங்குதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு பற்றுச் சீட்டிற்கும் கார்ப்பன் பிரதி வைத்திருக்கப்படவேண்டியதுடன் ஒவ்வொரு பற்றுச்சீட்டிலும் தொடர் இலக்கங்கள் பொறிக்கப் பட்டிருத்தலும் வேண்டும்.*

*25. 24 ஆம் துணைவிதியில் குறிக்கப்பட்ட கட்டணத்தி னின்றும் வறுமையைக் காரணமாகக்கொண்டு ஒரு நோயாளிக்குத் தலைவர் விலக்களிக்கலாம்.*

*26. தலைவர், ஒரு பிரத்தியேகமான நிதியை "ஆயுள்வேத நிதி" என்ற பெயருடன் ஆரம்பிக்கலாம். ஆயுள்வேத வைத்தியசாலைகளைப் பராமரிப்பதற்காக நன்மை விரும்புவோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நன்கொடைகள் இந்நிதியில் சேர்க்கப்படுதல் வேண்டும். இந்நிதியிலிருந்து பணம் காலத்துக்குக்காலம் எடுக்கப்பட்டு ஆயுள்வேத வைத்திய சாலைகளைப் பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.*

*27. திசெம்பர் 31 இல் முடிவடையும் ஒவ்வொரு வருடக் கடைசியிலும், அந்தந்த வருடத்தில் ஆயுள்வேத வைத்திய சாலைகளை நடாத்துவது சம்பந்தமான வரவுசெலவு பற்றிய ஒரு செலவுக்கூற்று ஒன்று தயாரிக்கப்படத் தலைவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.*

*28. இத்துணைவிதிகளில்—*

** "தலைவர்" என்பது சபைத் தலைவரெனப் பொருள் படும். "சபை" என்பது அம்பாறை மாவட்டத்தி லுள்ள, சம்மாந்துறை மேற்குக் கிராமச் சபையின் கிராமச் சபையெனப் பொருள்படும்.*

*"கட்டளைச்சட்டம்" என்பது 1961 ஆம் ஆண் டின் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப் பட்ட (257 ம் அத்தியாயமான) கிராமச் சபை கள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.*

** "ஆயுள்வேத வைத்தியசாலைகள்" என்பது சபை யால் தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டுவரும் ஆயுள் வேத வைத்தியசாலைகளாகும்.*

*"கிராமப் பிரதேசம்" என்பது, அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை மேற்குக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.*

*12-1428—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728*

---

# நானாவித அறிவித்தல்கள்

## சின்னச்செட்டிகுளம் மேற்கு கிராமச்சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பவரிடமிருந்து 1967 ம் ஆண்டிற்கு லைசன் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இந்தக் கிராமச்சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசன்ஸ் கொடுப்பதை மறுக்கவிரும்பினால் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினாலு நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| முகம்மதிலி மீராமுகை யதீன் | இல. 183, 1ம் படிவம் பாவற்குளம் | இறைச்சிக்கடை, 1ம் படிவம் பாவற்குளம் |

க. சுப்பிரமணியம்,
தலைவர்.

சின்னச்செட்டிகுளம் மேற்கு, கி.ச.,
1966 ம் ஆண்டு மார்கழி மீ 10 ந உ.

12–1416—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728

---

## குடாக்கரை—கிராமசபை

### *இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்*

*இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க, 257 ம் அத்தியாய திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் பின் காணும் அட்டவணையிற் காணப்படுபவரிடமிருந்து, 1967 ம் ஆண்டிற்கு கசப்பு தொழில் நடத்த அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கிறது. இந்த கிராம சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக் கப்படும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினால், மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கிடையில் மறுப்பிற்கான காரணங்களை இணைப்பிரதிகளில் எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.*

*அட்டவணை*

| *விண்ணப்பகாரரின் பெயர்* | *விலாசம்* |
|---|---|
| *வி. அப்துல் சலாம்* | *3 ம் வாட், கிண்ணியா.* |
| *வியாபார தன்மை* | *வியாபாரம் செய்யுமிடம்* |
| *மாட்டிறைச்சிக் கடை.* | *சீனக்குடா* |

*கே. ஜெயினுதீன்,*
*தலைவர், கிராம சபை.*

*கிராம சபை காரியாலயம்,*
*குடாக்கரை, சீனக்குடா.*

*12-1413—30.12.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,728*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படாது, இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர் தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1966

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** .. | 2.12.66 | வெள்ளி | .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

### அட்டவணை—1967

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** . | 6.1.67 | வெள்ளி | .. | 29.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 12.1.67 | வியாழன் | .. | 5. 1.67 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 20.1.67 | வெள்ளி | .. | 11.1.67 | புதன் | பி.ப. | 3.30 |
| | 27.1.67 | வெள்ளி | .. | 20.1.67 | வெள்ளி | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆண்டு டிசெம்பர் மீ 9 ம் உ.

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது